www.padippakam.com



# போய் வா

## நண்பனே!

## கண்ணீரோடு

## கை

## அசைக்கின்றோம்!

படிப்பகம்

www.padippakam.com

# பிரியாலயம் சினி ஆட்ஸ்

பாரீஸ்

அந்த அரங்கம் அழுகின்றது- ஏன்?
என்னை அதிர வைத்த ஒரு கலைஞன்
மறைந்து விட்டானே என்று...

அந்த ஒலிவாங்கி அழுகின்றது- ஏன்?
இனி எவன் வந்து என் முன்
இனிதாக இசைப்பான் என்று.....

அந்த மத்தளமும் உடுக்கும்
சத்தம் போட்டு கத்துகின்றன- ஏன்?

எம்மை சத்தம் போடவைக்க- இனி ஒரு
வித்தகன் இல்லையே என்று......

வாழும் வேலும் கேடயங்களும் அழுகின்றன-ஏன்?

எம்மை பாவிக்க இனி ஒரு கலைஞன் இல்லையே என்று..

காவலனே! கலைகளின் தலைவனே....
உமது மரணத்தால் நாம் மட்டுமல்ல
அரங்கில் இருந்து அணிகலங்கள் வரை அழுகின்றன

எழும்பு! துயில் கொண்டது போதும் எழும்பு!
இல்லையேல்? அவைகளும் தூங்கிவிடும்!

நடிப்பிசைக் காவலரே தூங்கியது போதும்!
அரங்கத்திற்கு, வா!

**பிரியாலயம் துரைஸ் (குடும்பத்தினர்)**

படிப்பகம்

www.padippakam.com

# கலைஞனே!

உன்னைக் கேலிசெய்தோம்
கிண்டல்கள் பண்ணினோம் - ஆனாலும்

எங்கள் ஆழ்மனதின் மூலையில்
எவ்வளவு பௌவியமாக கொலுவிருந்தாய் என்பதை
நீ மறைந்த செய்திகேட்டு - நாமதிர்ந்து
துடிதுடித்துப் பதைபதைத்துப்போனபோதுதான்
உணர்ந்து கொண்டோம்

## நேசத்திற்குரியவனே!

கலைபால் நீ கொண்ட கட்டற்றகாதல்
உன்னிடம் உள்ள ஓர்மம்
யாருக்கும் தலைவணங்கா உன்தனித்தன்மை
சரியென்று பட்டதை யாருக்கும் அஞ்சாது
செய்து முடிக்கும் உன் தீரம்
போற்றுகிறோம் ஐயா!

எல்லோரையும் நேசித்தாய்
எல்லோரையும் அன்புகொள்ளத்துடித்தாய்
பாடினாய்! ஆடினாய்! நடித்தாய்!
மேடைகள் மட்டுமா அதிர்ந்தன!
எல்லோருடைய மனங்களும்தான்.



எல்லாவற்றையும் விட
உன்னை நீ ரசித்தாய்
வாழ்ந்தாய் - போ!
கலைஞா நீ
இன்னும் வாழ்வாய்.

கண்ணீரோடு
*தலை தாழ்த்துகிறேன்*
***மனோ.***



படிப்பகம்


நாட்டுக்கொரு 'கிறெகரி'கள்
எங்களிடம் உருவானால் - நாம்
நாட்டிலாம் கலைத்துறையில்
வெற்றிக் கொடியதனை

அசுரனாய்! அரக்கனாய்!
கொடுமையான வில்லனாய்!
இந்திரனாய்! அரிச்சந்திரனாய்!!
பாசமுள்ள தந்தையாய்!
வந்தார் பலமேடைகளில்
'சங்கமும்' தந்தார்
சுந்தர வதனமுள்ள கிறெகரியே!
கலைச் சங்கமன்றோ..

கண் பட்டபோகுதையா உன்
கலைத்துறை வாழ்வுகண்டு
பொன்விழா கண்டு - இன்னும்
இளைஞனாக நிற்பவரே! - நீர்
பண்ணிய நாடகங்கள்
பறைசாற்றுமே உம் திறனை!

நான் தொகுத்தெழுதிவரும் 'எனது காதலர்கள்'
கவிதைத் தொகுதிக்காக நண்பன் கிறெகரி பற்றி
பலமாதங்களுக்கு எழுதிய கவிதை
- வண்ணை தெய்வம்





www.padippakam.com

# மண்ணிலே உன் புகழ் மாசின்றி ஓங்கட்டும்



திறமைமிகு கலைஞர் இவர்
பலதுறையில் வல்லவர்
நடிப்பென்னும் புதையலை
தன்னிடத்தில் கொண்டவர்
படிப்படியாய் வெற்றிகண்ட
துடிப்பான கலைஞர் இவர்
நிறைகுடமாய் கொலுவிருக்கும்
எங்கள் கிறெகரி தங்கராசா

கற்பனைக் கதைகளிலும்
காவியக் கதைகளிலும்
விற்பனர்தான் இவர்
விவேகமுள்ள பெரும் கலைஞர்
நாட்டுக்கூத்துகளை
முறையாக நெறியாழ்வார்
பாட்டுக்கள் பாடவந்தால்
மைல்கல்லை குரல்தாண்டும்
வீட்டிலுள்ள பாலகர்கள்
அனைவருமே கலைஞர்கள்தான்
சாட்டுக்காய் வளர்க்காமல்
காட்டியுள்ளார் பலமேடைகளில்



படிப்பகம்

# நந்தினி கலைத் தென்றல்

**வண்ணை தெய்வம்**



உன்னால் நான் உயர்ந்தேன்....

மேடை உம்மை சுமந்தபோதெல்லாம்
நாம் மகிழ்ந்தோம்.......
பாடை உம்மை சுமக்கின்றபோது
நாம் அழுகின்றோம்.......

உமது பணியை தொடர
இனி யார்?

நாட்டுக்கூத்து அழிந்ததா?
ஆட்டக்கூத்து அழிந்தா?

போச்சடா போச்சு - உன்னோடு
புலம் பெயர்ந்த மண்ணில்
எல்லாமே போச்சு

நான் கிறுக்கிய
கிறுக்கல்களுக்கெல்லாம்
இசை போட்டு
என் எழுத்துக்களை
பாடல்களாக்கியவனே
உன்னைப்போல் ஒருவனை
இனி எங்கே தேடுவேன்?

மனதில் பல ஆசைகளை
சுமந்து கொண்டு
நீ விழ்ந்துவிட்டாய்!
உனது ஆசைகளை
தீர்த்து வைக்கப்போவது யார்?

கரகோசங்களையும்
விமர்சனங்களையும்
மகிழ்வோடு ஏற்றவன் நீ!

நான் எதிர்பாராமலேயே
உன் புகழ்பாட
எனக்கொரு
வாய்ப்பு தந்தாய்!
ரஜனி பதிப்பகம் மூலம்
உன்கதையை
நான் படைத்தேன்
அது எனக்கொரு
பெருமை
இன்று உன்
மரணத்திலும்
கவிபாடும்
பாவியானேனே?

www.padippakam.com

# கண்ணீர் அஞ்சலி



கலைக்கு நிழல் தந்தாய் கலைஞானி நீ அன்று
கலைக்கோவிலின் தீபமாய் நீ இன்று
கலைக்கு கர்ணன் நீயன்றோ கலைஞர்க்கு
பொன்கொடுத்து புகழாரம் சூட்டினாய்
உன்புகழை நாம்பாடி முடிப்பதற்குள்
உன் உயிர் ஏன் பிரிந்ததுவோ எம்மை விட்டு?

ஏழு ஸ்வரங்களுள் ஒருஸ்வரம் தானிழந்தே
தவிக்குது இன்று 'சப்தஸ்வரங்கள்'!
இறுதியில், எங்கே நிம்மதி என நீ பாடி
நிம்மதி தேடி துயில்கொண்டதோ உன் இதயம்?

***கண்ணீர் துளிகளுடன்***
'சப்தஸ்வரங்கள்'
***இசைக்கலைஞர்கள் (பாரிஸ்)***


படிப்பகம்

www.padippakam.com

### கலைக்கோயிலின்

# சுடர் அணைந்தது!



நடிப்பிசைக் காவலன், கலைச் சுடர், கலையரசன்

## டி. கிறெகரி தங்கராஜா

**எங்கள் பாசத்திற்குரிய நண்பனும், கலைஞனுமான**
கிறெகரி தங்கராஜா அவர்களின் திடீர்மறைவு எம்மை அதிரவைக்கிறது.

பாரிஸ் கலைச்சூழலில் ஓர் அச்சாணி கழன்றதாக உணருகிறோம்.
யாழ்குடா நாட்டிலும் தொடர்ந்து பாரிஸ் மண்ணிலும் கலைத்துறைக்கு குறிப்பாக தமிழர்களின் பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்துக்கலைக்கு தன்னாலான பணியினை ஆற்றியவர்.

இவர் அரங்குக்குக் கொணர்ந்த கலைஞர்கள் பலர்.
இவரால் கௌரவிக்கப்பட்டவர்கள் பலர். பாரிஸில் கலைவளர்ப்பதிலும் கலைஞர்களை ஒற்றுமைப்படுத்தி ஊக்குவிப்பதிலும் முன்னின்றுழைத்தவர்.

நிமிர்ந்த நடை, மிடுக்கானபேச்சு, கணீரென்ற குரல், நேர்மை என்பன இந்த கலைஞனின் அணிகலன்கள்.

ஈழத் தமிழ்மக்களின் கலைவரலாற்றில் பதிவாகிவிட்ட இந்த கலைஞனை நாமும் நினைவாக்கி **அஞ்சலிக்கின்றோம்!**

*கிருஷ்ணா அச்சகத்தினர்- பாரிஸ்* 06. 01. 2000

படிப்பகம்

www.padippakam.com

# திருமறைக்கலா மன்றம்

## இரங்கற் செய்தி

திருமறைக்கலாமன்றத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவரான திரு. கிறெகரி தங்கராஜா இறைவனடி எய்திய செய்திகேட்டு நானும் மன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்த துயரமடைந்தோம். அவர் தன் வாழ் நாளில் மன்றத்தில் நடித்தும் இசைநிகழ்வுகளில் பங்குபற்றியும் கலைஉலகில் தமக்கெனத் தனிஇடத்தைப் பிடித்திருந்தார். அன்னாரின் இழப்பு பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் கலைஉள்ளங்களுக்கு பெரும் இடைவெளியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர் உறவினர் நண்பர்களோடு நாமும் இணைகிறோம்.

'வாழ்வு மாறுபடுகிறதேயொழிய எடுபடுவதில்லை''

அன்புடன்

நீ. மரியசேவியர் அடிகள்

இயக்குனர்

# முன்னணிக் கலைஞனை இழந்தோம்!

திருமறைக்கலாமன்றத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட கலைஞர்களின் வரிசையில் அமரர். திரு. கிறெகரி தங்கராஜா அவர்களின் பங்கு போற்றுதற்குரியதாகும். அவரது மறைவு கலைத்தாய்க்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். தனது வாழ்வின் முழுமூச்சையும் கலைக்காக அர்ப்பணித்து தன்னை ஓர் நல்ல நடிகனாக, இனிய குரல்வளம் பெற்ற இசைக்கலைஞனாக தமிழ் உலகுக்கு இனம்காட்டி, முத்தமிழ் கலையை வளர்க்க தமிழீழத்தில் மாத்திரமல்ல, புலம்பெயர் மண்ணிலும் இறக்கும்வரை பாடுபட்டு உழைத்த கலைஞானி. வளரும் கலைஞர்களை ஊக்குவித்து, அவர்கள் தன்னைப்போலவே கலைக்காக உழைக்கவேண்டுமென எண்ணி அவர்களுக்கு பட்டங்கள் பதக்கங்கள் வழங்கி கலைஞர்களின் மதிப்பை சமூகத்தின் மத்தியில் உயர்த்தப் பாடுபட்ட கலைவள்ளல். எமது மன்றத்தின் முப்பத்தைந்து வருட வரலாற்றில் 30வருடங்களை தனது பங்களிப்பால் நிரப்பி, எமது கலைப்படைப்புகளின் உயர்ந்த கலைத்தரம் பேணப்படவும், நல்ல சமூகநலக் கருத்துகள் மக்கள்மத்தியில் சென்றடையவும் தூணாக நிமிர்ந்து நின்றுழைத்த கலைக்காவலன்.



மரணம் உன் உயிரைப்பறித்தாலும் - உன்
கலை வாழ்வின் மூச்சு மரணிக்கவில்லை
நீ விட்டுச்சென்ற கலைப்பணியை - உன்
இனிய நினைவோடு தொடர்வோம்.
உன் ஆன்மா சாந்தி அடைவதாக! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் உறவினர்களோடு நாமும் கலக்கின்றோம்.

**திருமறைக்கலாமன்றம்**
*பிரெஞ்சுக்கிளை.*



படிப்பகம்

www.padippakam.com

# நல்லதொரு மனிதனை நாமிழந்தோம்



திரு. கிறெகரி தங்கராஜா அவர்கள் மறைந்தசெய்தி எம்மை திடுக்கிடவைத்தது.

பிறக்கின்ற மனிதர்கள் என்றோ ஒருநாள் இறந்துதான் ஆகவேண்டும். இது நியதி.
ஆனாலும் அன்பிற்கினியவர்களின் மறைவு அதிலும் ஒரு கலைஞனின் மறைவு,
ஒரு இசைஞனின் மறைவு
ஆழ்ந்த துயரைத் தருகிறது.
கலை உலகம் ஒரு கள்ளமில்லா மனிதனை
குழந்தை உள்ளம் கொண்ட நல்லமனிதனை இழந்து தவிக்கிறது.

இந்நேரத்தில் நாங்களும் எங்கள் துயர்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

*தவபாலன்*

***கொப்பி லாச்சப்பல்***



படிப்பகம்

www.padippakam.com

# கலையை நேசித்த உயர்ந்த கலைஞர்

ஈழத்தில் இருந்து ஐரோப்பிய நாடுகள் வரை புகழ்க் கொடி நாட்டிய ஒரு உன்னத கலைஞன், எனது இனிய நண்பன், கிறேகறி, தங்கராசா அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு சில மணித்துளிகள் சிலையாக நின்றேன்!
நண்பர் கிறேகறி, அவர்களின் மறைவு கலைத்துறைக்கே பேரிழப்பு என்றே கூறவேண்டும்!

40 ஆண்டுகளுக்கு மேலாக மேடைகளை அலங்கரித்து வந்த கிறேகறி தங்கராசா அவர்கள் சமூக நாடகங்களிலிருந்து, நாட்டுக்கூத்து, ஆட்டக்கூத்து, பாட்டுக்கள், என கலையை நேசித்து, பூசித்து வந்த உயர்ந்த கலைஞர்.
வாழ்க்கையில் இவர் கஸ்ரங்களை காணாமல் இருக்கலாம்? ஆனால்! கலைச் சேவையில் இவர் பட்ட கஸ்ரங்கள் ஏராளம்.

இரங்கும் இல்லத்திற்காக பல தடவைகள் சன்மானம் எதையும் எதிர்பாராது, தூக்கமின்றி விழித்திருந்து வந்து, எங்கள் மேடைகளை சிறப்பித்த பெருமைக்குரியவர் இவர்.

இவரின் பொன் விழாவிலே கலந்து கொள்ளும் பெரும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது சிறப்பு விருந்தினர்களை கௌரவிக்கவென நீர் அமைத்து வைத்த சிறப்புச் சிம்மாசனங்கள் இன்றும் எனது கண்ணுக்குள் நிற்கின்றது.

இரங்கும் இல்லமும், ஈழநாடும், சேர்ந்து கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகளை வழங்கி கௌரவித்தபோது 'மா' மணி என்பது மிகப் பெரிய பதம் அதற்கு நாங்கள் எவரும் தகுதி இல்லாதவர்கள் 'கலைமணி' என்று கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்றார். இப்பொழுது இரங்கும் இல்லம் வழங்க இருக்கும் **கலைப் பவளம்**' என்னும் பெயர்ப் பதத்தையும் தேர்வு செய்து தந்தவரும் இவர்தான்.

இப்படியான ஒரு உயர்ந்த கலைஞனை நாம் இழந்துவிட்டோம்!
இவரின் மரணம் எமது கலைத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.
இன்னொரு கிறேகறியை நாம் தேடியும் பெறமுடியாது!

நண்பா! நீ இறப்பாய் என்று தெரிந்தா மூன்று தினங்களுக்கு முன்பும் என்னோடு மணிக்கணக்காக உரையாடினாய்!

உனது மரணத்தைக்கண்டு என்னோடு சேர்ந்து இரங்கும் இல்லமும் அழுகின்றது.

*சிவனடியான் ஸ்ரீபதி*
இரங்கும்இல்லம், ஜேர்மனி



படிப்பகம்

www.padippakam.com


# Royal Snack Bar

*La chapelle*
*Tel:- 01 40 36 41 21*


## நேற்றும் நீ
## இன்றும் நீ
## நாளையும் நீ
## என்றும் நீ

மன்னனாக வந்தாய்!
மாவீரனாக வந்தாய்!
அரக்கனாக வந்தாய்!
அரிச்சந்திரனாக வந்தாய்!

எத்தனை மேடைகள்?
எத்தனை அரங்கங்கள்?
அத்தனையிலும் நீ
முத்திரை பதித்தாய்.

எத்தனையோ கலைஞர்கட்கு
பதக்கங்கள் கொடுத்தாய்.
எத்தனையோ கலைஞர்கட்கு
பட்டங்கள் கொடுத்தாய்.

இப்படி இப்படியெல்லாம்
கலைஞர்களை கௌரவித்த
மாபெரும் கலைஞன் நீ



நேற்றும் நீ...இன்றும் நீ...
நாளையும் நீ... என்றும் நீ...

திரு. திருமதி.ராகுலன் குடும்பத்தினர்



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞனுக்கு. கண்ணீர் அஞ்சலி



வாழ்ந்திடும் வாழ்வும் பொய்
கண்டிடும் கனவும் பொய்
கொண்டிடும் அழகும் பொய்
சேர்த்திட்ட சுகமும் பொய்
மரணம் ஒன்றே மெய்.

காலையில் சிரித்திருந்தாய்
காப்பியுண்டு மகிழ்ந்திருந்தாய்
சில நிமிடம் ஓடவில்லை
கால் இடறி வீழ்ந்து விட்டாய்
எப்படி சொல்வோம் -எம்
அண்ணன் மறைந்துவிட்டான்

அண்ணன் இறந்தனன்
என்று கூற -எம்
மனமோ மறுக்கின்றது
வருந்தும் உள்ளங்கள்
வாட்டங்கள் களைந்திட
மீண்டும் துடித்தெழுந்து நீ
வரத்தான் வேண்டும
நெருங்கி பழகிய
நேச நெஞ்சங்களை
கலங்க ஏன் வைக்கின்றாய்?
காவலரே உமைப்போலொரு
கலைஞனை நாமினிமேல்
காண்பதெப்போ இப்புவியில்?

*(விமல்) பெற்றம்மா குடும்பத்தினர்*



படிப்பகம்

www.padippakam.com

## கண்ணீரால் நனைகிறோம்!



காதோடு கொஞ்சும் மென்மொழியும் - வீதிக்
கரையெல்லாம் நந்தவனப் புன்சிரிப்பும் - புதிய
தேர்போன்று அசைந்து புல்நுனியும் சிலும்பாது
வாங்வாங்கு வாழ்ந்தவனே - நீ
போன இடம் எங்கே!

*சுப்பிரமணியம்*
*வரதராசா குடும்பத்தினர்*

## எங்கள் இதய அஞ்சலி

சித்தமெல்லாம்
உறைந்ததப்பா
செயல் இழந்தது எம் உடலம் - நீர்
செத்ததென்ற செய்தி
செவியினுள் நுழைய மறுத்தது - நீர்
ஒத்ததாசை என்றிருந்தோம் - எம்
நினைவில் தீ விழுந்தது
பற்றி எரியுதையா நெஞ்சம்
பதைபதைப்பு மறையவில்லை.



*வில்லியம் நிமால்*
*குடும்பத்தினர்*


படிப்பகம்

www.padippakam.com

# எண்ணற்ற ரசிகர்களை ஏங்கவைத்துச் சென்றவனே

கலைக்காய், இசைக்காய்
விடியும்வரை விழித்திருப்பான்
இன்று புவிமறந்து தனை மறந்து தூங்குகிறான்

ஓங்காரமாய் குரலெடுத்து நாதமிட்ட செல்வமகன்
ஒய்யாரமாய் இன்று ஓசையின்றி தூங்குகின்றான்
பாங்கான நடிப்பிலே பார்ப்பவரை கவர்ந்தமகன்
நடிக்காமல் தூங்குகிறான் நிரந்தரமாய் தூங்குகிறான்

மேடையிலே தூங்கமாட்டான்
சோடைபோக நடிக்கமாட்டான் - இன்று
பாடையிலே தூங்குகிறான்

நாடே புகழ்ந்துநின்ற
நடிப்பிசைக்காவலன்
நிரந்தரமாய் தூங்குகின்றான்
அவனை எழுப்பாதீர்கள்
என் நண்பன்
தனைமறந்து தூங்குகிறான்
அவனை எழுப்பாதீர்கள்
இந்தக்கணமாவது நிம்மதியாய் தூங்கட்டும்



தூங்கு நண்பா தூங்கு
எண்ணற்ற ரசிகர்களை
ஏங்கவைத்து சென்றவனே
கண்மூடி தூங்கு
தூங்கு நண்பா தூங்கு
நாங்கள் மட்டும் விழிநீர் சொரிகிறோம்.


***பரமநாதன் குடும்பத்தினர்***



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணுக்குள் நிற்கின்ற கலைஞன்..



முத்துச் சப்பறம்போல்
அரங்கமெல்லாம் ஜொலித்திருப்பான்!
கொத்துப் பூக்களைப்போல்
நண்பர்களோடு மகிழ்ந்திருப்பான்
நித்தம் ஒரு மேடையென
சாதனை படைத்திடுவான் -இன்று
செத்துக் கிடக்கின்றான்
சிரித்தபடி கிடக்கின்றான்

கண்ணுக்குள் நிக்கின்றான் -எமது
காதுக்குள் ஒலிக்கின்றான்
கனவுகளில் வருகின்றான் -எம்
மனங்களில் வாழ்கின்றான் -இம்
மண்ணில் இன்று
கிறேகறி மறைந்துவிட்டான் -எம்
முன்னிலையில் இன்று
சாய்ந்து படுத்துவிட்டான்

என்ன கொடுமை இது?
ஏன் இந்த சோதனை
இன்னொரு கிறேகறி
பிறந்திடுவானா இனி

அன்னையே கலைத்தாயே -நீ
இன்னொரு பிள்ளைய
பெற்றிடலாம் தானே?
எம்மோடு வாழ்ந்தவனை
தத்தெடுத்தது கொடுமையம்மா!

சக கலைஞர்கள்
**அப்புக்குட்டி ரீ. ராஜகோபால்**
**சின்னக்குட்டி ரீ. தயாநிதி**



படிப்பகம்

www.padippakam.com



# கலையே உன் நிலை எண்ணிப்பார்

**கிறெகரி தங்கராஜாவே!**
கலைஞருடன் கைகுலுக்கி
நாளெல்லாம் நீ நடந்த பாதையெல்லாம்
உன் மூச்சின்றி முகாரி பாடுதையா!

எம்மிதயச் சுவர்களின்மீது
எழுதிவைத்த கலைவேந்தனின்
கல் வெட்டுக்கள் யாவும்
கண்ணீரில் கரைந்ததையா!

நினைவு மலர்களால்
சூடிவைத்த கலைக்கொத்து
எங்களது சுவாசக் காற்றால்
மணம்வீசி மணம்வீசி மணம்வீசி
இதயத்தைக் கனக்கப்பண்ணுதையா!

சிரித்த முகத்தோடு என்றும்
மென்னகை ஒளி சிந்திட
இதழ்விரித்த பற்கள் மல்லிகைப்
பூக்களாக மிளிர்ந்து மின்னிட
பாசம் மேவி அள்ளியணைத்திடும்
நேயமிகு வாஞ்சையில் வாடித்
துடிக்குதையா எங்கள் உறவெல்லாம்!

நாட்டுக்கூத்துப்பாடல்களும்
தென்பாங்கின் தேன்தமிழ் கீதங்களும்
பாத்திரங்கள் பகர்வின் நேர்த்திகளும்
கல்வெட்டின் சிந்து பாடி எழுந்து
செங்கோல் எறிந்து துள்ளும்
வேங்கையின் பாச்சல்களும் பாட்டும்
எமக்குள் பெரும்பெரும் மாபெரும்
சுமையாகிக் கொண்டதையா!

இனியாரைத் தேடுவோம்
நாட்டுக்கூத்து மெட்டெடுக்க!
இனியாரைத் தேடுவோம்
கலைஞரைக் கௌரவிக்க
இனியாரைத் தேடுவோம்
வீதியெங்கும் கலைவாடை வீச!

இனியார் இவன்போல் கலைஞர்க்கு
கலைஞனாய் மாகலைஞனாய்
கலைக்கோயில் கண்ட கலைஞானியாகப்
பிறந்திடுவான்? பிறந்தாலும் இவன்போல்
சுருதிக்கட்டை ஒலி எதிரொலிக்குமா?
இல்லை இல்லை இந்த வேளை
என் கவிதை மாகவிஞனின் கவிதையை
விம்மும் நெஞ்சோடு தொடுகிறது
*'சாவே உனக்கொருநாள்*
*சாவு வந்து சேராதோ!*
*சஞ்சலமே நீயுமொரு*
*சஞ்சலத்தைக் காணாயோ!*
*தீயே உனக்கொருநாள்*
*தீ மூட்டிப் பாரோமோ!*
*தெய்வமே உன்னையும் நாம்*
*தேம்பி அழவையோமோ!*

...

'கலைக் கோயிலே எங்கள்
கலைக்கோயிலே
கலைத் தாகம் கொண்டோர்க்கு
உருவானதே'
நானெழுதிய பல்லவியே படுக்கையானால்
சரணம் சங்கொலிப்பது எப்போது
ஐயகோ ஐயகோ இறைவா!

பூப்படுக்கை கொண்டவன் - என்
பாவால் அழவைத்த இறைவா
நோகாமல் அவனது ஆத்மா
சாந்தி அடையட்டும்!
**– மா. கிறிஸ்ரியன்** (6.1.2000)



படிப்பகம்

www.padippakam.com

# வணங்காமுடி



## என்னுயிர் கிறெகரி!

கிறேகறி தங்கராசாவே!
நீண்ட நெடும் கலைப் பயணத்தில்
நிலைத்திருந்த கலை ஒளியே!

விலைபோகாதவன் நீ!

கனி வீழ்ந்தாலும்....
கல்லெறி வீழ்ந்தாலும்...
தாங்கிக் கொள்ளும்
தலை உள்ளவன் நீ!

நீ ஒரு வணங்காமுடி!

மோகனமும் பாடுவாய்!
முகாரியும் பாடுவாய்!

எந் நிலையிலும்
உன் நிலை மாறாதவன் நீ!

உன்னால் வாழ்த்தப்பட்ட
கலைஞர்களே ஒரு பட்டாளம்!

பரிசில்களும் பட்டங்களும் -உன்னை
தேடி வந்து அலங்கரித்தன...

கலைக் கோயிலை சமைத்தவன்
சங்கமத்தை வெளியிட்டவன்.......
கலைச் சுடராய்........
நடிப்பிசைக் காவலராய்.......

பாதுகையில் பரதனைக் கண்டேன்....
அரிச்சந்திரனைக் கண்டேன்....
அதில் நடிகமணியை கண்டேன்
சங்கிலிய மன்னனாகவும் கண்டேன்...

உனது சந்தமும் தொனியும்
கைகோர்த்து இணைந்துவர
அரச விருத்தம் அள்ளியெறிய
கல்வெட்டும் கனல் தெறிக்க
உனது உடையும் நடையும்
மேடையை அதிர வைக்க
நடிப்பிசைச் சக்கரவர்த்தி
பூந்தானையும் உன்னில் கண்டேன்.

உன்னை பாட்டுக்கு அழைத்து
படு தோல்வி கண்டவர்கள் ஏராளம்!

சாந்தமும் பண்பிலும்
பரவசம் அடைந்தோரும் ஏராளம்!
காலங்கள் வாழ்த்தும்

காவியமானவன் நீ!

சீவியத்தில் என்னை நேசித்தவனே!
மரணத்திலும் உன்னை மறவேன்.

கண்ணீரோடு
**முகத்தார் எஸ். யேசுரட்ணம்**



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளையடிக்கப்படாத கல்லறை



நண்பனே!

உன்னுடைய மனதில்

எத்தனை எண்ணங்கள்?

எத்தனை ஆசைகள்?

அத்தனையும்

வர்ணம் பூசப்படாதவைகளாக...

வெள்ளையடிக்கப்படாத

கல்லறைகளாக.........

படிப்பகம்